## வேந்தர் விசுவநாதன் தலைமை: கவிப்பேரரசு வைரமுத்து சிறப்புரை!

# வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## அமைச்சர் துரைமுருகன் - முரசொலி செல்வம் - கனிமொழி கருணாநிதி எம்.பி.- அமைச்சர் ஆர். காந்தி வாழ்த்துரை!

வேலூர், ஆக.28-

வி.ஐ.டி. பல்கலைக் கழகம், பாவேந்தர் பாரதிதாசன் தமிழ் இலக்கிய மன்றம் விஐடி வேலூர், இணைந்து நடத்திய முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, வேலூர் வி.ஐ.டி.யில் நேற்று முன்தினம் நடந்தது. விஐடி வேந்தர் ஜி.விசு வநாதன் தலைமை தாங்கினார். தமிழியக் கம் அமைப்பு செயலாளர் வணங்காமுடி வரவேற்றார். மாநில செயலாளர் சுகுமார் நோக்கவுரை வழங்கினார்.

பொதுச் செயலாளர் அப்துல்காதர் தொடக்க உரையாற்றினார்.

இவ்விழாவில் கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன், முரசொலி செல்வம், அமைச்சர் ஆர்.காந்தி, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., கவிப் பேரரசு வைரமுத்து ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

### அமைச்சர் துரைமுருகன்

இவ்விழாவில் கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:-

கலைஞர் அரசியல்வாதி மட்டுமல்ல, மனிதாபிமானம் கொண்டவர். சாதாரண குடும்பத்தில் பிறந்து இந்தியாவே போற்றக் கூடிய தலைவராக வளர்ந்திருக்கிறார் என்றால், அவரது வைராக்கியம், கொள்கை பிடிப்பு அதுதான் அவரை உயர்த்தியிருக்கிறது. விஜடி வேந்தருக்கு உள்ளூர கலைஞர் மீது உள்ள பாசம் எனக்கு தெரியும். அந்த பாசத்தின் அடையாளமாக இந்த விழாவை எடுத்திருக்கிறார்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசினார்.

### முரசொலி செல்வம்

விழாவில் முரசொலி செல்வம் அவர்கள் பேசியதாவது:

நிகழ்காலத்திற்கு மட்டுமின்றி எதிர்காலத் தலைமுறையின் வளர்ச்சியிலும் தலைவர் கலைஞரின் பங்கு அளப்பரியது. அவர் தமிழ்நாட்டிற்கு செய்த சாதனைகள் மூலம் வாழையடி வாழையாக அவரை நினைவு கூர்ந்து கொண்டிருக்கும்.

அவரது சாதனைகள் தமிழ் நாட்டையும் தமிழர்களையும் தலை நிமிரச் செய்துள்ளது. எல்லா தரப்பு மக்களின் ஏற்றத்துக்காகவும் சிந்தித்து சிந்தித்து செயல்பட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர். தமிழ்நாட்டை செதுக்கிய நவீன சிற்பி கலைஞர் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு முரசொலி செல்வம் அவர்கள் பேசினார்.

### கவிப்பேரரசு வைரமுத்து

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் விழா பேருரையில் பேசியதாவது:

வயது தாண்டி சாதனை படைத்தவர் கலைஞர். அவரை இளைஞர்கள் பல வழிகளில் பின்பற்றலாம். சாதிப்பதற்கும் வயதுக்கும் சம்பந்தமில்லை என நிரூபித்தவர் கலைஞர். அவர் அத்தனை சமூகத்தையும் மேம்படுத்தியவர். சிறு வயதிலிருந்து மரணம் வரை பகுத்தறிவாளனாக வாழ்ந்து மறைந்தார். மாணவர்கள் அண்ணா, கலைஞர் எழுத்துக்கள், சங்க இலக்கியங்கள், திருக்குறள் ஆகிய வற்றை வாய்விட்டு வாசிக்க வேண்டும். கலைஞர் அவர்களின் எழுத்துக்களை வாய்விட்டு வாசித்துத்தான் நான் எனது தமிழை வளர்த்துக் கொண்டேன்.

புதிதாக சிலர் அரசியல் கட்சி தொடங்குகின்றனர். ஒரு கட்சிக்கு மூலதனம் என்பது தொண்டர்களோ, கட்டமைப்போ இல்லை. பகைதான் அதற்கு மூலதனம். எதிரி இல்லை என்றால் வெற்றி கிடைக்காது. ஆங்கிலேயர் என்ற நல்ல எதிரி கிடைத்ததால்தான் மகாத்மா காந்தி வென்றார். ஆரியம் எனும் எதிரியால்தான் திமுக வளர்ந்தது. அது போல் எம்ஜிஆருக்கு எதிரியாக கலைஞர் இருந்தார். அதனாலேயே எம்ஜிஆரால் வெற்றி பெற முடிந்தது. எதிரியை வைத்துத்தான் அரசியல் கட்சியின் வெற்றியும், தோல்வியும் அமையும்.



கலைஞர் அவர்கள் எதிரிகளை உண்டாக்கிக் கொண்டே இருந்தார். தடைகற்களை படிக்கற்களாக மாற்றினார்.

செங்கோல் இல்லை என்றால் எழுதுகோல் உள்ளது என சாதித்து காட்டினார். உழைப்பு, எதிரிகளை எப்படி கையாள்வது என்பதையும்,துணிச்சலுடன் எப்படி வாழ வேண்டும் என்பதையும் கலைஞர் அவர்களிடம் கற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் பேசினார்.

### வி.ஐ.டி. வேந்தர் ஜி.விசுவநாதன்

விழாவில் வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் ஜி. விசுவநாதன் அவர்கள் பேசியதாவது:-

தமிழ்நாட்டில் 82 பல்கலைக்கழகங்கள் இருக்கிறது. இந்த பல்கலைக்கழகத்தில் மட்டும் தான் கலைஞரின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெறுகிறது. அதுமட்டு மின்றி கலைஞருடன் 60ஆண்டுகள் பயணித்தவன். கலைஞர் சாதாரண மனிதன். எவ்வாறு வளர்ந்து சாதனைகளை செய்ய முடியும் என்று காட்டியவர். தன் உழைப்பால் முயற்சியால் தொல்காப்பியத்திற்கே உரை எழுதும் அளவிற்கு தன்னை வளர்த்துக் கொண்டார். மாநிலத்திற்கு மரியாதை இருக்க வேண்டும். என்னென்ன அதிகாரம் இருக்க வேண்டும் என்று சொன்னவர் கலைஞர். அப்படிப்பட்ட கலைஞர் நாட்டுக்காக வாழ்ந்தவர், அந்த குடும்பம் நாட்டுக்காகவே வாழும் குடும்பம். என்றைக்கும் கலைஞர் நினைவோடு இருப்போம். அவர் பெயராலேயே ஒரு கட்டடத்தையும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். இன்றைக்கு வாழ்த்து செய்தியும் அனுப்பியுள்ளார்.

இவ்வாறு வேந்தர் ஜி. விசுவநாதன் பேசினார்.

### விருதுகள்

இவ்விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முன்னாள் செயலாளர்கள் கி.ராஜ மாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு), எஸ். ராஜரத்தினம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) மற்றும் கலைஞர் அவர்களின் பாதுகாப்பு அதிகாரிகள் கணேசன், வினோ த் கலைஞர் அவர்களின் மக்கள் தொடர்பு அலுவலர் மருதவிநாயகம், கலைஞர் அவர்களின் செயலாளர் கோ.சண்முகநாதன் அவர்களின் புதல்வர்கள் அருண், பாலாஜி, சட்டக்கதிர் ஆசிரியர் வழக்கறிஞர் வி.ஆர். எஸ். சம்பத் ஆகியோருக்கு கலைஞர் அவர்களின் நினைவு சின்னம் அடங்கிய விருது வழங்கப்பட்டது.

மேலும் இவ்விழாவில் கதிர்ஆனந்த் எம்.பி., பொருளாளர் புலவர் பதுமனார், எம்.எல்.ஏ.க்கள் ஏ.பி.நந்தகுமார், கார்த்திகேயன், ஈஸ்வரப்பன், அமலு, தமிழரசி, மேயர் சுஜாதா, துணை மேயர் சுனில்குமார், ஒன்றியக்குழு தலைவர் வேல்முருகன், மண்டலக்குழு தலைவர் புஷ்பலதா வி.ஐ.டி. துணைத்தலைவர்கள் சங்கர் விசுவநாதன், ஜி.வி. செல்வம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

அந்நிய முதலீடுகளை ஈர்த்திட

# முதல்வரின் அமெரிக்கப் பயணம் வெற்றிபெற வாழ்த்துகள்!

## தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!



சென்னை, ஆக. 29 -

முதல்வரின் அமெரிக்கப் பயணம் குறித்து தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அந்நிய முதலீடுகளை ஈர்த்து தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்கிட இன்று அமெரிக்கா பயணமாக உள்ள முதல்வரின் பயணம் வெற்றி பெற வாழ்த்துக்கள்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்தப்பின் அந்நிய செலவாணியை அதிக அளவில் ஈர்த்து, தமிழ்நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்கி, பொருளாதார மேம்பாட்டிற்குத் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக முதலமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி பல்வேறு நாடுகளிலிருந்து தொழில் முதலீட்டாளர்களைச் சந்தித்து பேசியும், தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தியும், அந்நிய செலவாணிகளை ஈர்த்து தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதில் முனைப்புடன் செயல்பட்டு வருவதை இந்த நாடு அறியும்.

அதன்விளைவாகத்தான் இதுவரை 10 லட்சம் கோடிக்கு அதிகமான முதலீடுகளை பெறுவதற்கான புரிந்துணர் ஒப்பந்தங்களும், ஏறத்தாழ 30 லட்சம் பேருக்கான வேலை வாய்ப்பு கிடைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கியுள்ளார். இதன் விளைவாக தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவின் முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது. திராவிட முன்னேற்ற கழக அரசு எப்போதெல்லாம் அமைகிறதோ, அப்போதெல்லாம் தொழிற்சாலைகள் தொடங்குவதில் தனிக் கவனமெடுத்து அதற்காக அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில் பெரும் பங்காற்றி வந்திருக்கிறது.

அந்த அடிப்படையில் தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தமிழ்நாட்டில் பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்கிடவும், அதன் மூலம் வேலை வாய்ப்புகளை பெருக்கிடவும், அதனால் தமிழ்நாட்டினுடைய பொருளாதார மேம்பாட்டை உயர்த்திடவும், அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறார். அந்த அடிப்படையில் தற்போது அமெரிக்காவிற்கு பயணமாகி உள்ளார்.

அமெரிக்காவில் பல்வேறு முதன்மை தொழில் முதலீட்டாளர்களை எல்லாம் சந்திக்க உள்ளார். அதன் மூலம் அதிக அளவிலான அந்நிய முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, தமிழ்நாட்டில் கூடுதலான தொழிற்சாலைகள் தொடங்குவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது. முதலமைச்சருடைய அமெரிக்க பயணம் வெற்றி பெறவும், அதிக அளவில் அந்நிய முதலீடுகளை ஈர்த்திடவும், அதன் மூலம் தமிழ்நாட்டின் பொருளாதார வளத்தை மேம்படுத்திடவும் முதலமைச்சருடைய முயற்சிகளை வரவேற்று பாராட்டுகிறேன். அவரது அமெரிக்கப் பயணம் வெற்றி பெற்றிட வாழ்த்துக்கள்.

இவ்வாறு பொன் குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

# கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ அறிக்கை!



கள்ளக்குறிச்சி, ஆக.29 -

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ விடுத்துள்ள அறிக்கை பின் வருமாறு:

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 29.08.2024வியாழக்கிழமை இன்று காலை 10.00 மணி அளவில் கள்ளக்குறிச்சியில் உள்ள V.S.V தனியார் திருமண மண்டபத்தில் தெற்கு மாவட்ட கழக அவைத்தலைவர் ராமமூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளது,

எனவே கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,மாவட்ட பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் மாநில துணை அமைப்பாளர்கள், மாவட்டத் துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் உள்பட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. கழக முப்பெரும் விழா குறித்து. 2. 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து.

3. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

தென்காசி வடக்கு மாவட்ட

# ஒன்றிய - நகர - பேரூர்க் கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்



## மாவட்டக் கழக செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ அறிவிப்பு

| நாள் / நேரம் / கிழமை | ஒன்றிய - நகர - பேரூர் கழக செயலாளர்கள் | ஒன்றிய - நகர - பேரூர் கழகங்கள் | இடம் |
|---|---|---|---|
| 29.08.2024 வியாழக்கிழமை காலை 9.00 மணி | T.T.ராமச்சந்திரன் | மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியம் | சமுதாய நலக்கூடம், வேலப்பநாடானூர் |
| 29.08.2024 வியாழக்கிழமை காலை 11.00 மணி | K.V.பெரியதுரை | மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியம் | அபிஷேக் திருமண மஹால், குருக்கள்பட்டி |
| 30.08.2024 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி | மு.பிரகாஷ் | சங்கரன்கோவில் நகரம் | கணபதி மினி மஹால், சங்கரன்கோவில் |
| 30.08.2024 வெள்ளிக்கிழமை மாலை 8.00 மணி | P.குணசேகரன் | குருவிகுளம் கிழக்கு ஒன்றியம் | பல்நோக்கு மையம், நக்கலமுத்தன்பட்டி |
| 31.08.2024 சனிக்கிழமை காலை 9.00 மணி | கோ.பூசைப்பாண்டியன் | வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றியம் | தேவர் திருமண மஹால், தலைவன்கோட்டை |
| 31.08.2024 சனிக்கிழமை காலை 11.00 மணி | செ.சேர்மத்துரை | குருவிகுளம் மேற்கு | சீனிவாசா திருமண மண்டபம், திருவேங்கடம் |
| 31.08.2024 சனிக்கிழமை காலை 12.00 மணி | கா.மாரிமுத்து | திருவேங்கடம் பேரூர் | சீனிவாசா திருமண மண்டபம், திருவேங்கடம் |
| 31.08.2024 சனிக்கிழமை மாலை 3.00 மணி | ரூபி.பாலசுப்பிரமணியன் | வாசுதேவநல்லூர் பேரூர் | விஸ்வகர்மா மண்டபம், வாசுதேவநல்லூர் |
| 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி | ஆ.அந்தோணிசாமி | புளியங்குடி நகரம் | மூர்த்தி பாப்பா திருமண மண்டபம், புளியங்குடி |
| 02.09.2024 திங்கள்கிழமை காலை 9.00 மணி | லாலா P.சங்கரபாண்டியன் | சங்கரன்கோவில் தெற்கு ஒன்றியம் | ஜெய் சாந்தி மஹால், சங்கரன்கோவில் |
| 02.09.2024 திங்கள்கிழமை காலை 10.00 மணி | K.V.வெள்ளத்துரை | சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியம் | ஜெய் சாந்தி மஹால், சங்கரன்கோவில் |
| 02.09.2024 திங்கள்கிழமை நண்பகல் 12.00 மணி | M.பால்ராஜ் | மேலநீலிதநல்லூர் தெற்கு ஒன்றியம் | KSP.திருமண மஹால் வன்னிகோனந்தல் |
| 08.09.2024 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி | மா.கடற்கரை | குருவிகுளம் தெற்கு ஒன்றியம் | நாடார் திருமண மஹால், குருவிகுளம் |
| 08.09.2024 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணி | R.கிறிஸ்டோபர் | குருவிகுளம் வடக்கு ஒன்றியம் | நாடார் திருமண மஹால், குருவிகுளம் |
| 09.09.2024 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி | பொன். முத்தையா பாண்டியன் | வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றியம் | தேவர் திருமண மஹால், சிவகிரி |
| 09.09.2024 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணி | K.T.C.குருசாமி | ராயகிரி பேரூர் | தேவர் திருமண மஹால், சிவகிரி |
| 09.09.2024 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணி | சேது சுப்பிரமணியன் | சிவகிரி பேரூர் | தேவர் திருமண மஹால், சிவகிரி |

அது சமயம் நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீ குமார் - முன்னாள் அமைச்சரும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ச.தங்கவேலு Ex.MP - தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் யூ.எஸ்.டி.சீனிவாசன் - பரமகுரு - மாவட்ட அவைத் தலைவர் கோ.பத்மநாபன் மாநில நிர்வாகிகள் மருத்துவர் . செண்பக விநாயகம் - முத்துச்செல்வி Ex.MLA மாவட்ட நிர்வாகிகள் சரவணன் புனிதா - மனோகரன் - ராஜதுரை - பொதுக்குழு உறுப்பினர்கள் வேல்சாமிப் பாண்டியன் - மாரிச்சாமி -பராசக்தி - மகேஸ்வரி - தேவதாஸ் - மாரிச்சாமி ஆகியோர் கலந்து கொள்கிறார்கள் / எனவே சம்பந்தப்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் ' முறையான கூட்ட அழைப்புகள் அச்சிட்டு கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணைஅமைப்பாளர்கள் தலைவர்கள், துணைத்தலைவர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் கிளைக்கழக செயலாளர்கள் கிளை பிரதிநிதிகள் பாக முகவர்கள் என அனைவரும் பங்கேற்கும் விதமாக பொது உறுப்பினர் கூட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வழக்கறிஞர் ஈ.ராஜா எம்.எல்.ஏ
மாவட்டக் கழக செயலாளர்
தென்காசி வடக்கு மாவட்ட திமுக